உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

| | | | |
|---|---|---|---|
| துணர் ௰கூ | சுபானு—தை | 1944—சனவரி | மலர் ௰ |


## சென்னைத் தமிழிசை மாநாடு குறித்துப் பொழிலாசிரியர் கருத்துரைகள்.

சென்னைமாநகரில் சென்மேரி மண்டபத்தில் சென்ற 23—12—43-ஆம் நாளில் நிகழ்ந்த இசை மாநாட்டில் கலந்து கொள்ளும் பேறு கிடைத்தமைக்கு மகிழ்கின்றோம். மாநாட்டின் தொடக்கத்தில் இனிய பாடலை **எம். தண்டபாணி தேசிகர் அவர்கள்** பாடியவுடன் அவையினர் அமைதியடைந்தனர். கூட்டத்தில் பலகட்சித் தலைவர்களும் ஒருசேரக் குழுமி அமர்ந்திருந்த காட்சி உள்ளத்திற்கு உவகையளித்தது. மக்கட்டிரள் மிக்குற்றமையால் மண்டபம் எங்கும் இருக்க இடமின்றிப் பலர் நின்ற வண்ணம் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர்.

மாநாட்டுத்தலைவர் **டி. கே. சிதம்பரநாதமுதலியார் அவர்கள்** தம் தலைமையுரையைத் தெளிவும் இனிமையும் பொருந்த நிகழ்த்தினர். **இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள்** மாநாட்டைத் திறந்துவைத்து அரிய விரிவுரையாற்றினார்கள். அவ் விரிவுரையில் எதிர்ப்பாளர்கட் கெல்லாம் மறுப்புரை கூறித் தமிழிசையியக்கத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமெனவும் வேண்டினார்கள். இம் மாநாட்டில் சிறப்பாகப் பொன்னெழுத்துக்களால் பொறித்துவைக்கவேண்டிய விரிவுரை **சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்களது** விரிவுரையே யாகும்.

திருவாளர் செட்டியாரவர்கள் "யான் பலநாட்டிலும் சுற்றிவந்த நாடோடிப் பழக்கங்கொண்டு சிலசொற்களைக் கூறுகிறேன்" எனத் தொடங்கும்பொழுதே அவையில் நகை

யொலி அரும்பிற்று, அவ்வொலி அடங்குமுன் செட்டியாரவர்கள் "இத்தமிழ் நாட்டில் தமிழர்க்குக் கலியாணம், கருமாதி செய்துவைத்துத் தமிழருடைய குருக்கண்மார் எனப் போற்றப் பட வேண்டுமானால் அக்குருக்கள் வடமொழி மந்திரங்களைப் பொருள் தெரிந்தோ தெரியாமலோ தடையின்றிச் சொல்லிப் போதற்குரியராயிருக்க வேண்டும்; இந்நாட்டில் இசையிற்சிறந்த புலவர் என்று ஒருவர் விளங்கவேண்டுமானால் அவர் தெலுங்கு மொழியிலமைந்த வண்ணங்களைப் பொருளறிந்தோ அறியாமலோ இசையரங்கெங்கும் பாடவேண்டும்; இந்நாட்டில் அரசியலில் அலுவல்பெற்று வயிற்றுப் பிழைப்பிற்கு ஒருவர் வழிகாண வேண்டுமெனில் அவர் ஆங்கிலம் படித்திருக்கவேண்டும்; இந்நாட்டில் ஒருவர் சிறந்த தலைவரென விளங்கவேண்டுமானால் அவர் இந்நாட்டினர் எல்லோரும் இந்திமொழியைப் படியுங்கள்; அதுதான் நாட்டின் பொதுமொழியென வலியுறுத்தி அறிவுறுத்தவேண்டும். என்னே தமிழ் நாட்டின் இழிந்த நிலைமை! என்னே தமிழர்களின் இழிந்த நிலைமை" எனக்கூறியவுடன் அவையிலெழுந்த கைதட்டொலியும், ஆரவார ஒலியுங் காதைச் செவிடுபடச் செய்தன. இவ்வொலிமகிழ்ச்சியால் எழுந்தனவா? பெருமிதத்தால் விளைந்தனவா? அன்று, அன்று; பின் எவற்றால் எழுந்தன? இளிவரவாலும் வெகுளியாலும் எழுந்தன இவ்வாரவாரம் எழுப்பிய தமிழர் ஒலியின் மூலம் அறிவித்தவை என்ன? ஆம் தமிழ்நாடு இத்தகைய இழிநிலையில்தான் இருக்கின்றது; இவ்விழிவை யொழிக்க விழிமின் எழுமின் இன்றே இன்றமிழ்ப் பணிபுரிய வெளிப்போதருமின் என அறைகூவி அழைக்கும் அறிவிப்பொலியன்றோ?

தமிழ் நாட்டின் இழிந்த நிலைமையைச் சுட்டிக் காட்டிய செட்டியாரவர்கள் இவற்றோடு நிறுத்தினரா? "என்னுடைய தாய் மொழியில் எனது நாட்டில் இசைபாட வேண்டுமென்று கூறுதற்கு யான் பிறரிடஞ்சென்று மன்னிப்புக்கேட்கவோ, அன்றிக் கெஞ்சிக்கேட்கவோ வேண்டிய அவசியம் என்ன நேர்ந்துவிட்டது? என மேலும் வினவினார்கள். மீண்டும் அவையில் ஒலி எழுந்தது. இவ்வொலியின் பொருளென்ன? கோவை மன்னரே! நீவிர் கூறியன உண்மையே; இன்று பிறரிடம் கெஞ்சிக்கேட்கும் நிலைமையில் தமிழர்களாகிய யாம் அஞ்சி நிற்கின்றோம்; எம் அச்சம் அகல ஆவன செய்தருள்வீராக என அவரை வேண்டும் ஒலியன்றோ?

செட்டியாரவர்கள் மேலும் தம் சிறந்த முடிபைத் திறம்பட வுரைத்தார்கள், "எனது நாட்டில் எனது மொழியில் இசை பாடவேண்டும்; என் தாய்மொழி ஏனைய மொழிகளைக் காட்டி

லும் உயர்ந்ததோ, தாழ்ந்ததோ; தெய்வீகசத்தி வாய்ந்ததோ, இல்லையோ; அவற்றைப் பற்றியெல்லாம் எனக்குக் கவலையில்லை. யான் பாட்டின் கருத்துக்களை உணர்ந்து உணர்ந்துஉணர்ச்சிபெற வேண்டுமென்றால் எனது நாட்டில் எனது மொழியில் பாட வேண்டுமென யான் கூறுகின்றேன்" என நம் கோவைத்தலைவர் ஆணையிடுவார் போன்று கூறினர். இம் மொழிகள் எம் செவி யுட் புக்கவுடன் சேரன் நெடுஞ்சேரலாதன் முன்னொருகால் குமரியொடு வடவிமயத்தொரு மொழியாகிய தமிழ்மொழியே தழைக்கக் கோல்செலுத்திய கோலக்காட்சியை நமக்கு நினைவூட்டி யூக்கவந்ததலைவர் இவரோ எனும் நினைவெழுந்தது. அன்று சேரன் இட்ட ஆணையே போன்று இன்றும் நம் கோவைத்தலைவர் **சர் சண்முகம் ஆணையிட்டுள்ளனர்.** இராசா சர் அவர்களும் **"இத்தமிழகத்திலே தமிழ்முழக்கஞ் செய்வதைத் தடை செய்யுந் தமிழன் இருக்க முடியாது"** என வலியுறுத்திக் கூறியுள்ளனர். தமிழ்நாட்டின் முடிசூடாமன்னர்களாகிய இருவரும் ஆணையிட்ட பின் இவர்களாணைக்குத் தமிழக எதிரிகள் அடங்கியே நடக்க வேண்டும். இவ்வாணையைமீறி, அங்கும் இங்கும் தமிழிசைக்குத் தடை விளைப்பான் வேண்டிக் கூக்குரல் எழுப்பினால், அன்று தமிழ் மன்னனாய சேரன் செங்குட்டுவனை எதிர்ந்த கனக விஜயர் அடைந்த கடைப்பட்ட நிலைமையையே எதிர்ப்பாளரும் கடைசி யில் அடைவர் என்பதை அறிவித்து அச்சுறுத்துகின்றோம். எதிர்ப்பாளர்கள் எதிர்ப்பொழிந்து இந்நாட்டில் இன்புற்று வாழ வேண்டின் **கோவைத்தலைவரும், இராசா சர் அவர்களும்** கூறிய ஆணைக்கு அடங்கியொழுகுவாராக. இம் மாநாட்டில் பிறர் ஆற்றிய சொற்பொழிவினைக் குறித்து மற்றொருமுறை வகைப் படுத்தி யுரைப்பாம். இம்மாநாட்டில் நிறைவேற்றப்பெற்ற முடிபு களை வேறுபக்கத்தில் வெளியிட்டுள்ளோம். மாநாட்டு நிகழ்ச்சி முறைகளைக்குறித்தும், மாநாட்டின் சார்பாக நிகழ்ந்த இசை யரங்கினைக் குறித்தும், தமிழிசை எதிர்ப்பாளர்கள் கூறும் தகவிலா மொழிகளைக் குறித்தும், பின்னொருமுறை ஆராய எண்ணியுள்ளோம். இம் மாநாட்டின் முடிபுகளை நடைமுறை யில் ஆட்சிக்குக் கொணர்ந்து தமிழ் ஆக்கத்திற்கு ஆவனசெய்யும் வண்ணம் தமிழ் மக்களை வேண்டுகின்றோம். இங்ஙனம் தமிழ் மொழிக்கு ஆக்கந்தேடுவான் வேண்டித் தமிழிசை யியக்கத்தைத் தோற்றிவித்துவளர்த்து வரும் தலைவர்கட்குத் தமிழ்நாடு நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. **வாழ்க தமிழிசை; வாழியர் இத் தமிழிசையியக்கத் தந்தை இராசர் அண்ணாமலைச்செட்டியார்; வாழி யர் சர் சண்முகம் என வாழ்த்துகின்றோம்.**

---

## பல்கலைப் புலவர்க்குப்பரிசளித் தூக்குமின்.

பல்கலைப்புலவர் தாகூர்சட்ட விரிவுரையாளர் தமிழ்ப் பேராசிரியர் திரு. **கா. சுப்பிரமணிய பிள்ளை** M. A., M. L; அவர் கட்குப் பொற்கிழியளித்துப் பாராட்டுவான் வேண்டிப் பல பெரியோர்கள் கையெழுத்திட்டுய்த்துள்ள மடலினைக் கண்டு மகிழ்ந்தோம். இவ்வறிக்கையில் கையொப்பமிட்டுள்ள பெருந் திருவாளர்களின் முயற்சியினை யாம் பாராட்டுகின்றோம். தமிழ் நாட்டில் தமிழர்க்கெனப் பரிந்துபேசி, எதிர்ந்து போராடியதகை சான்ற தமிழர் ஒருவர் உண்டெனின் அவர் நம் பிள்ளையவர் களேயாவார்கள். தமிழரை யுயர்த்த வேண்டிப் பிள்ளையவர் கள் செய்த முயற்சியின் பயனைத் துய்ப்பவர் தமிழரே. நம் பிள்ளையவர்கள் இல்லையெனின் தனித்தமிழ் உணர்ச்சி தக வொன்றத் தமிழ்நாட்டில் இவ்வளவு பரவி வளர்ந்தோங்கி யிருக்குமா என்பதனை அன்பர்கள் எண்ணிப்பார்க்க வேண்டு கின்றோம். தமிழரின் தன் மான வுணர்வு குன்ற வரும் எச்செயலையும் அஞ்சாது எதிர்ந்த வீரர் நம்பிள்ளையவர்களே யாவார்கள். பிள்ளையவர்களின் தமிழ்ப்புலமையினையும் ஆங் கிலப் புலமையினையும் தமிழர் நன்கறிவார்கள். நம் பிள்ளை யவர்கள் நுண்மாண் நுழைபுலங்கொண்டு இலக்கியம், வரலாறு இவற்றில் விருப்புடையோர் மகிழ **இலக்கிய வரலாறு** என்ற நூலை ஆக்கித்தந்துள்ளனர். சமய குரவர்கள் வரலாறுகளையும், **சைவசித்தாந்த** உண்மைகளையும் எளிய இனிய உரைநடையில் எழுதி, தமிழர் சமய உண்மைகளை எளிதில் உணர உதவி யுள்ளனர். இலக்கணப்புலவர் மகிழத் தொல்காப்பியப் பொரு ளதிகாரத்தை நன்கு ஆய்ந்து பொருளுரை வழங்கியுள்ளனர். உரையாசிரியர் மகிழ உரையியற்றுவோர்க்கு வழிகாட்டும் பான்மையில் திருக்குறள் முழுமைக்கும் சுருக்கவுரை வரைந் தளித்துள்ளனர். ஆங்கில அறிவியற் கலைநூற் சொற்களின் பொருள் பொருந்த ஆங்கிலச்சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற் களையும், வடமொழிச் சொற்களுக்கேற்ற தமிழ்ச்சொற்களையும் தம் உரைநடையில் பெருக வழங்கி எழுதுந்திறன் பிள்ளையவர் கட்கே தனியுரிமைச் சிறப்புடையதொன்றாம். தமிழர்களுள் முதன் முதலாகத் **தாகூர் சட்ட விரிவுரையாளர்** என்னுஞ் சிறப் பினைப்பெற்ற இப்பெரியார்க்குத் தமிழருடைய முழு ஆதரவும் கிடைத்திருப்பின் இதுநாளும் சென்னைமண்டில உயர்மன்ற நீதியந்தலைவராய்த் திகழ்வார்கள். ஆங்கிலமொழியிலும், சட்ட

நூல் நுட்பங்களிலும் மிகுதியும் வல்லுநர் என வடநாட்டின ராலும் போற்றப்பெற்ற நம் பிள்ளையவர்கள் தமிழரால் போற் றப்பெறுமை நம் நாட்டின் சீர்கேடான நிலைமையையன்றோ காட்டுகின்றது. மேற்கூறப்பெற்ற தகுதிகள் யாவற்றையும் ஒருங்குபெற்று மிளிரும் நம்பிள்ளையவர்கட்குத் தமிழர்கள், கட்சி வேறுபாடின்றிக் கலந்து நின்று நன்றியறிவை உலகிற்கு வெளிப்படுத்தும் முறையில் இதுவரையில் யாருக்கும் இத்தகைய **சிறந்தபொற்கிழி** யளிக்கவில்லையென உலகம் போற்றுமாறு சிறந்த பொற்கிழியளித்துப் பிள்ளையவர்களைப் போற்றியூக்கும் வண்ணம் தமிழர்களைப் பெரிதும் போற்றி வேண்டுகின்றோம். நம், பிள்ளையவர்கட்குச் செய்யுஞ் சிறப்பு தமிழன்னைக்குச் செய்யுஞ் சிறப்பன்றோ? பிள்ளையவர்கள் இறையின்னருளால் எல்லா நலனும் பெற்று நீடூழி தமிழ்த்தொண் டாற்றி மகிழு மாறு இறைவனை வழுத்தி வணங்குகின்றோம்.

## மகிழ்நன் மறைவு.

வேலூர் ஊரிஸ்கல்லூரியின் தலைமையாசிரியரும், வடவாற் காடு மாவட்ட நாட்டுப் போர்முன்னணி அபைப்பாளருமாகிய **திரு. க. ப. சந்தோஷம் என்னும் மகிழ்நன் அவர்கள்,** துடுமென இவ்வுலகவாழ்வினின்றும் மறைந்தமை கேட்டு மிகவும் வருந்து கின்றோம். இவ்வறிஞர் எழுதியுள்ள ஆராய்ச்சிக்கட்டுரைகள் புலவர்க்குப் பெருவிருந்தெனத் திகழ்கின்றன. ஆங்கிலப் புல மையும் தமிழில் சீரிய கூரிய புலமையும் பெற்றுத் திகழ்ந்த தண்டமிழ்த் தொண்டராகிய நம் மகிழ்நன் இந்நாட்டுப்புல வர்க்கு விருந்தெனத் திகழ்ந்தவர் இன்று விண்ணுட்டுப் புல வர்க்கு விருந்தாயினர். இவரது அரிய முயற்சியால் வட ஆற் காடு மாவட்டத்தில் தமிழுணர்ச்சி தழைத்தோங்கியது. நல்ல தமிழ்ப்பற்றும் சலியா உழைப்பும் தமிழ் மக்கள் முன்னேற்றத் தில் பெருவிருப்புமுடைய இப்பெரியாரின் மறைவு தமிழர்க்கு மிகப் பேரிழப்பாகும். இன்றமிழ்ப் பணிபுரிந்த இவரின்னுயிர் இறைவன் திருவடியில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்துகின்றோம்.

## சென்னைத் தமிழிசை மாநாட்டு முடிபுகள்.

**1.** (அ) சென்னை வானொலி நிலையத்தில் நூற்றுக்கு நாற்பது பங்கு தமிழ்ப்பாட்டும், நாற்பது பங்கு தெலுங்குப் பாட்டும் இருபது பங்கு பிறமொழிப் பாட்டும் பாட ஏற்பாடு செய்ய வேண்டுமென வானொலி நிலைய ஆட்சியாளர்களை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(ஆ) தமிழ் நாட்டில் தமிழ்மக்களுக்கென ஏற்படுத்தப் பெற்றிருக்கும் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் பாட எல்லா வகுப்பினருக்கும் சமமான பங்கு கொடுக்கவேண்டு மென்றும் பாடல்களில் நூற்றுக்கு எண்பது பங்கு, தமிழ்ப் பாட்டுக்களையும் இருபது பங்கு பிறமொழிப் பாட்டுக்களையும் பாடும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் வானொலி நிலைய ஆட்சியாளர்களை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**2.** (அ) தமிழ் நாட்டிலுள்ள இசைப்புலவர்கள் அனைவரும் இசையரங்குகளில் பெரும்பாலும் தமிழ்ப்பாட்டுக்களைப் பாடுதலை மேற்கொள்ள வேண்டுமெனவும், சிறப்பாகத் தொடக்கத்திலும் முடிவிலும் தமிழ்ப் பாட்டுக்களையே பாடவேண்டு மெனவும் இம்மாடு இசைவாணர்களை வேண்டிக்கொள்கிறது.

(ஆ) தமிழிசையியக்கத்தை ஆதரிக்கும் இசைவாணர்களை மிகுதியும் போற்றி ஆதரிக்க வேண்டுமென்று தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவரையும் இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

**3.** தமிழ் நாட்டில் தமிழருக்காக நடைபெறுகிற இசையரங்குகளில் எல்லாம் பெரும்பாலும் தமிழ்ப்பாடல்களையே பாடச்செய்ய வேண்டுமென்று தமிழ் நாட்டிலுள்ள எல்லா இசையரங்கினரையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

**4.** சென்னைப் பல்கலைக் கழக இசைப் பகுதியில் நூற்றுக்கு நாற்பது பங்கு தமிழுக்கும் அறுபதுபங்கு பிறமொழிகளுக்கும் இடமளிக்க வேண்டுமென ஷெ பல்கலைக் கழகத்தினரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

## சேலம் தமிழுணர்ச்சி மாநாடு.

இம்மாநாடு **25, 26—12—43-**ஆம் நாட்களில் சேலம் கல்லூரியில் கல்லூரித்தலைவர் திரு. A. **இராமசாமிக்கவுண்டர்** எம். ஏ., எல். டி., அவர்கள் சீரிய தலைமையில் நிகழ்ந்தேறியது. புலவர் ஞா. தேவநேயப் பாவாணர், புலவர் இளவழகனார், ஆசிரியர் வரதநஞ்சையபிள்ளை, பெருஞ்சொல் விளக்கனார் மு. சரவண முதலியார் முதலிய தமிழறிஞர்கள் மாநாட்டில் சொற்பொழிவாற்றினர். இம்மாநாட்டில் நிறைவேறிய முடிபுகளைக் கீழே தந்துள்ளோம். இம் முடிபுகள் யாவும் தமிழ் மக்கட்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத்தகுந்த முடிபுகளாகையால் இம்முடிபுகளை ஆழ்ந்து சிந்திக்கும் வண்ணம் தமிழ் மக்களை வேண்டுகின்றோம்.

*1.* திருக்கோயில் வழிபாட்டையும் திருமணங்களையும் பிற சடங்குகளையும் தமிழிலேயே நடத்துமாறு இம்மாநாடு தமிழ் மக்களனைவரையும் வேண்டுகின்றது.

*2,* மக்களுக்கும், இல்லங்களுக்கும், தெருக்களுக்கும் தமிழ்ப் பெயர்களாக இடுமாறும், தூய தமிழிலேயே பேசியும் எழுதியும் தமிழின் தூய்மையைப் பாதுகாக்குமாறும் இம்மாநாடு தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

*3.* தமிழ் நாட்டைத் தனிமாகாணமாகப் பிரிக்கவேண்டுமென்று எல்லாத் தமிழர்களும் முயலுமாறு இம்மாநாடு வேண்டுகின்றது.

*4.* தமிழ்நாட்டுக்கென்று அமைக்கப்பட்ட திருச்சி வானெலி நிலையத்தில் இப்போது வழங்கிவரும் கொச்சைத்தமிழையும் கலவைத் தமிழையும் நீக்கித் தூயதமிழையே இனிக்கையாளுமாறு அரசியலாரையும், நிலையத்தாரையும் இம்மாநாடு வேண்டுகின்றது.

*5.* தமிழ்ப்பாடநூற்குழுவிற்குப் பெரும்பாலும் தமிழுணர்ச்சியுள்ள புலவர்களையும் அறிஞர்களையும் தேர்ந்தெடுக்குமாறு அரசியலாரை இம்மாநாடு வேண்டுகின்றது.

*6.* தமிழ்நாட்டு இசையரங்குகளிலே தமிழ்ப்பாட்டுக்களுக்கே முதன்மைதந்து பெரும்பாலும் தமிழ்ப்பாட்டுக்களையே பாடவேண்டுமென்று இசைவாணர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

7. தமிழ்ச்செய்தித்தாள்களிலே இயன்றவரைத் தூய தமிழ்ச் சொற்களையே பெய்து எழுதுமாறு, தாள் ஆசிரியர்களை இம்மாநாடு வேண்டுகின்றது.

8. தமிழரின் நாகரிக மேம்பாட்டை விளக்கும் கதைகளையே தூய தமிழில் படம் பிடிக்குமாறு திரைப்படமெடுப்போரை இம்மாநாடு வேண்டுகின்றது.

9. பள்ளியிறுதித் தேர்வுக்குக் கலைப் பாடங்களையெல்லாம் தமிழில் எழுதலாமென்று இருப்பது போல் 'மெட்ரிக்குலேஷன்' தேர்வுக்கும் தமிழில் எழுதலாமென்று திட்டம் போடும்படி சென்னைப்பல்கலைக்கழகத்தாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

10. பள்ளிக்கூடங்களுக்கும் கல்லூரிகட்கும் பாடமாகவுள்ள கலைநூல்களில் சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டிருக்கிற 'கலைச்சொற்கள்' என்ற நூலிலுள்ள சொற்களையே பயன்படுத்துமாறும் வடமொழிவேர்களை அடிப்படையாகக் கொண்டு புதிய கலைச்சொற்களை ஆக்கும் முயற்சியை அடியோடு கைவிடுமாறும் இம்மாநாடு அரசினரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

11. கல்வி கேள்விகளில் போதுமான இலக்கிய அறிவு பெறுவதற்கு முயற்சி செய்யும்படி தமிழ் நாட்டு இசைப்புலவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

12. தமிழ் நாட்டில் தமிழ்க்கலை வளர்ச்சிக்கெனப் பல்கலைக்கழகமொன்று இன்மையால் அண்ணுமலைப்பல்கலைக்கழகத்தைத் தமிழ்ப்பல்கலைக்கழகமாக்கித் தமிழ்நாட்டிலுள்ள கல்லூரிகளை யெல்லாம் அந்தப் பல்கலைக் கழகத்தோடு இணைக்குமாறு இம்மாநாடு அரசினரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

13. உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆங்கில ஆசிரியர்கட்கு இருப்பதுபோன்று தமிழாசிரியர்களுக்கும் ஒத்த மதிப்பும் ஊதியமும் அளிக்குமாறு அரசினரை இம்மாநாடு வேண்டுகின்றது.

14. தமிழ்ப் பாட புத்தகங்களில் அறிவிற்குப் பொருத்தமற்ற புராணங்களையும், புராணக் கதைகளையும் சேர்க்கக்கூடாதெனப் 'பாட புத்தகக் குழுவினரை' இம்மாநாடு வேண்டிக் கொள்ளுகிறது. "சூத்திரர்" என்று சட்ட புத்தகங்களில் வழங்குவதை நீக்கித் தமிழரென்றே வழங்குமாறு இம்மாநாடு அரசினரை வேண்டுகின்றது.

# * சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

தேவகோட்டை வித்துவான், "பாலகவி" வயிநாகரம்
வே. இராமநாதன்செட்டியார் அவர்கள்.

அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் ஆக்கப்பெறும் செய்யுள் நூல்கள், அகமும் புறமுமாகிய இருதிணைகள் பற்றி யனவாகும். அவை தொண்ணூற்ருறுவகையின. அவற்றுள், பிள்ளைத்தமிழும் ஒன்று, இது பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி எனவும் வழங்கப்பெறும். பாட்டுடைத் தலைவனையோ அன்றித் தலைவியையோ பிள்ளையாகவைத்து, அவரது சிறப்பியல்புகளைக் கூறுவது இதன் முறை. பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல், முதலிய இலக்கண நூல்கள் பிள்ளைத்தமிழுக்குரிய இலக்கணங்களை நன்கு கூறுகின்றன.

சேக்கிழார் பெருமானுக்குப் பிள்ளைத்தமிழ் கூறிய பேராசிரியர் மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள். இப் பிள்ளைத் தமிழில், பாட்டுடைத் தலைவராகிய சேக்கிழார் பெருமானது அளவிட வொண்ணுத பெருஞ் சிறப்பியல்புகளும், ஆசிரியர் பிள்ளையவர்களின் புலமைத்திறம் சைவப்பற்று, தமிழ்ப் பற்று, சொல்வன்மைகளும் நன்கு புலப்படுகின்றன.

இவர், இந்நூல் செய்தற்குக் காரணமாயிருந்தவர் தேவகோட்டை வன்ருெண்டச் செட்டியார் என்னும் பெரியாராவர். பிள்ளையவர்கள் திருப்பெருந்துறைப் புராணம் பாடி அரங்கேற்றிய பொழுது அந்நூலிலுள்ள சைவப் பெருநலங்களை யெல்லாம் துய்த்த செட்டியாரவர்கள், உண்மை நாயன்மார்களது வரலாறு கூறிய சேக்கிழார் பெருமானுக்கு ஓர் பிள்ளைத் தமிழ் இயற்றித்தர வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்களென்றும், சேக்கிழாரது திருத்தொண்டர் புராணத்துக்கு வன்ருெண்டரது வாய்மொழியாகிய திருத்தொண்டத்தொகை காரணமாயிருந்தது போல, அச்சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கும் வன்ருெண்டரது வாய்மொழியே காரணமாக வாய்த்ததெ ன

* திருச்சிராப்பள்ளி அனைத்திந்திய வானெலியில் பேசியது. உடன்பாடு பெற்று வெளியிடப்படுகிறது.

மகிழ்ந்து இந்நூலை இயற்றினுர்களென்றும் மகா மகோ பாத்தி யாய டாக்டர் ஐயரவர்கள் சொல்லுவார்கள். ஆசிரியர் பிள்ளை யவர்கள், தொடக்கத்தே ஆனைமுகக் கடவுளுக்குக் கூறுகின்ற வணக்கச் செய்யுள்,

மாமேவு வான்பிறை முடிப்பிறை யிரண்டென்ன
வாய்க்கடைத் தோற்றியவிரு
மருப்பிரண் டென்னவங் கைக்கோ டிரண்டென்ன
மார்பின் முத்தாரமென்னப்
பாமேவு பேருதர பந்தமெனவரைசூழ் படாமெனத்
தாளின் முத்தம்
பதித்தகழ லெனவிரவ மேலோங்கு பேருருப்
பண்ணவனை யஞ்சலிப்பாம்
ஏமேவு ஞானசபை யிறைவர்தம் மேனியினிணங்குற
வெழுப்பு லகெலாம்
என்னுமறை யாதியாக் கொண்டவருயிர்க் கருளு
மியல்பனைத்துந் தெரித்து
நாமேவு மம்முதலொ டொன்ற வினையுருபு
தொக நான் கனடி யாதி செய்து
நாற்சிரி ஞனெறி விளக்கியொளிர் சேக்கிழார்
நற்றமிழ்க் கவிதழையவே,

என்பதாகும். இதில் "மேலோங்கு பேருருப் பண்ணவனை அஞ் சலிப்பாம்" என்று கூறுவது திருத்தொண்டர் புராணத்து விநாயகக் கடவுள் வணக்கச் செய்யுட் கருத்தோடு பெரிதும் ஒற்றுமையுடையது. அத்திருத்தொண்டர் புராணத்துக் கரி முகக் கடவுள் வணக்கச் செய்யுளில் "நீண்முடிக்கடக்களிறு" என்னும் பகுதிக்கு உரை கூறுகின்ற சைவ ஆசிரியர்கள், அது அப்பெருமானது பேருரு (விஸ்வரூபம்) வைக்கூறுவதாகும் என் பர். இத் திருத் தொண்டர் புராணப் பகுதியை ஆசிரியர் நினைவுகொண்டே இங்கு பேருருப் பண்ணவனை அஞ்சலிப்பாம் என்று கூறுகின்றுர்.

இனி இச்செய்யுளின் பிற்பகுதியில், ஞான சபைத் தலைவ ராகிய தில்லைக் கூத்தர், வானிழல் வழியே தந்த உலகெலாம் என்னும் மெய் மொழியை முதன் மொழியாகக் கொண்டு, அப் பெருமான் உலகத்து உயிர்களுக்கு அருள்புரியும் வகைகள் அனைத்தையும் விளக்கி, அவ்வுலகெலா மென்னும் சொல்

நான்காவதடியின் முதல்மொழியாகிய மலர் என்ற வினைகொண்டு முடியும் வண்ணம் முடித்து ஈற்றடிச் சீர்கள் நான்கினாலும் சித்தாந்த சைவச் செந்நெறிகளாகிய நன்னெறி, தோழர்நெறி, மக்கள் நெறி, அடிமை நெறியாகியவற்றைப் புலப்படுத்தியவர் சேக்கிழார் என்னும் சிறப்பினை நன்கு கூறுகின்றார்.

சேக்கிழார் பெருமானின் "உலகெலா முணர்ந்தோதற் கரியவன்" என்னும் செய்யுளின் ஈற்றடியாகிய "மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்" என்பது ஞானம், யோகம், கிரியை, சரியை ஆகிய நான்கு நெறிகளையும் புலப்படுத்துமெனவும், முதல் மொழியாகிய மலர் என்னும் சொல் உலகெலாம் என்பதைப் பின் பற்றி மலர்ந்த—மலர்கின்ற—மலரும் சிலம்படி எனப் பொருள் தந்து கூத்தப் பெருமானின் சென்றகால, நிகழ்கால, எதிர்காலத் திருவருளுண்மையை விளக்குமெனவும் எடுத்துக் காட்டிய சிறப்பு சிந்தித்து மகிழ்தற்குரியது.

குருவணக்கமும் அவையடக்கமும் என்ற பகுதியில், திருக் கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனச் சிறப்பையும், தமது ஞானாசிரியராகிய சுப்பிரமணிய தேசிகரின் பெருமையை யும், மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள், சிவப்பிரகாச முத லாய எட்டுநூல்களை இயற்றித்தந்த உமாபதி சிவாசாரியாரின் பேரருளையும் வியந்து பாராட்டியுள்ளார். மெய்கண்ட நூல்கள் பதினான்கையும்,

உந்தி களிறு உயர் போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்—வந்த அருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்பம், உற்று

என்னும் வெண்பாவால் அறியலாம். இவற்றுள் சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொ டிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகியவை உமாபதி சிவாசாரியார் அருளியன. இச் செய்யுளில், பாட்டுடைத் தலைவராகிய சேக்கிழார் பெரு மானை முருகவேளுக்கும், மூத்தபிள்ளையாருக்கும், சிவபெருமா னுக்கும் உவமிக்கின்றார்.

குன்றையுறமேவித் திருந்து மேர் வளங்கொண்டு
[பெருமையின் மேலாகிச்
சிறத்தலால் செம்மேனிக் குமரவே ளொத்தும்

பாங்குபெறத் துதிக்கை யொடொர் கோட்டத் தனுய
பயிற்சி யினக் குமரவே டிருத்தமைய னெத்தும்
பரவு சேக்கிழானெனும்பேர் பரித்தலின் கணேசப்
பண்ணவனை யினிதுயிர்த்த திருத்தாதை ஒத்தும்
வீங்கு புகழ்படைத்த அருள் மொழித்தேவன்

என்னும் பகுதியால் இவ்வுவமையை யறிகின்ருேம்.

குன்றை யுற மேவி என்பது, குன்றுதோருடல் பொருந்தி யெனவும், குன்றத்தூரைப் பொருந்தி யெனவும், திருந்தும் ஏர் வளங் கொண்டு என்பது செவ்விய அழகு வளம் கொண்டு எனவும், நேராகிய உழவு வளங் கொண்டு எனவும், பெருமையின் மேலாகி என்பது பெரிய மயிலின் மேல் பொருந்தி எனவும் பெருமைக்கு மேம்பட்டு எனவும் குமரவேளுக்கும் சேக்கிழாருக்கும் பொருந்த இரு பொருள் குறிக்கும் நிலையிலும், துதிக்கை யொடு என்பது தும்பிக்கை யொடெனவும், பலரும் தொழுத லொடெனவும், ஓர் கோட்டத்தனுய பயிற்சியின் என்பது ஒற்றைக் கொம்பு உடையவனுகிய தன்மையால் எனவும், புலியூர்க் கோட்டமென்னும் ஓர் கோட்டத்தையுடைய தன்மையால் எனவும், மூத்தபிள்ளையாருக்கும் சேக்கிழாருக்கும் பொருந்த இரு பொருள் குறிக்கும் நிலையிலும், சேக்கிழான் எனும் பேர் பரித்தலின் என்பது இடபத்திற்கு உரியான் என்னும் பெயருடைமையின் எனவும், சேக்கிழான் என்னும் பெயருடைமையின் எனவும் சிவபெருமானுக்கும் சேக்கிழாருக்கும் பொருந்த இருபொருள் குறிக்கும் நிலையிலும் அமைந்துள்ளன.

இச் செய்யுளின் இறுதியில் "என்னறிவிற்கேற்பமேய பிள்ளைத்தமிழென ஒன்றுரைப்பல்" என்பது பிள்ளை மரபினனுகிய யான் தமிழென்று ஒன்று உரைப்பேன் என்னும் பொருளையும் தந்து அழகு செய்கின்றது.

காப்புப் பருவத்தில் மற்றை யாசிரியர்களும் இலக்கணமும் கூறும் வழியே திருமால் முதலாயினேரைக் காப்புக் கடவுளராகக் கூறவில்லை. சேக்கிழார் பெருமானது திருத்தொண்டர் புராணத்துத் தலைவர்களாகிய நாயன்மார்களையே காப்புக் கடவுளர்களாக வைத்துப் புராணச் சருக்க முறையே பதினெரு காப்புச் செய்யுட்கள் கூறியிருக்கின்ருர். காப்புப் பருவச் செய்யுட்கள் ஒன்பதேனும் பதினென்றேனும் இருத்தல் வேண்டுமென்ற இலக்கணவிதி இதற்குப் பெரிதும் பொருந்தியிருப்பது அறிந்து மகிழ்தற்குரியது.

(தொடரும்)

## சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள்

*சென்னைத் தமிழிசை மாநாட்டின் ஈற்றில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.*

பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே! எங்கள் சங்கத்தின்சார்பாக நன்றியறிதலைத்தெரிவித்துக்கொள்வதற்காக யான் உங்கள்முன் வந்திருக்கிறேன்.

முதல்முதல் யாருக்கு எங்கள்மனப்பூர்வமான நன்றியென்றால், எங்களை நிரம்பவும் கவனித்துப் பலமான எதிர்ப்பைக்கொடுத்து, கட்டுரைகள், தலையங்கங்கள், பிரசங்கங்கள், அதிகப்பிரசங்கங்கள், வெளிப்படைக் கடிதங்கள், கேலிச் சித்திரங்கள் இவைகளை எல்லாம்போட்டுப் பிரசாரம்செய்தார்களே, அவர்களுக்கு முதல் வணக்கம். ஏன் அவர்களுக்கு முதல் வணக்கம் என்றால், உலகத்திலே எந்த விதமான இயக்கமும் எதிர்ப்பு இல்லாவிட்டால் முன்னேற்றம் அடையாது. தமிழிசை இயக்கத்திற்கு எதிர்ப்பே தோன்றவில்லை என்று ஏற்படுமோனால், இந்த இயக்கம் வளர்ச்சியடைவதற்கு மார்க்கம் இருந்திராது. அதற்கு வேண்டிய எதிர்ப்பைக் கொடுத்து, எங்களுக்கும் தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் தமிழ் மக்களுக்கும் உற்சாகத்தைக் கொடுத்த இந்த மகான்களுக்கு எங்கள் வந்தனத்தைச் செலுத்திவிடுகிறோம்.

நம்முடைய இயக்கத்திற்குப் போதுமான அளவு உதவி செய்யவில்லையென்று அனைத்திந்திய வானொலிநிலையத்தாரிடத்தில் எங்களுக்குக் கொஞ்சம் மனச்சங்கடம் உண்டு. ஒலிபரப்பியில் தமிழிசைச் சங்கத்தின் பேரைச் சொல்வதற்குக்கூட அவர்கட்கு வருத்தமாக இருந்தது. இந்த விழாவின்மூலம் தமிழ்மக்களின் ஊக்கத்தைத் தெரிந்தபிற்பாடாவது, வானொலி நிலையத்தார் தங்கள் மனப்பான்மையை மாற்றிக்கொள்வார்களென்று நம்புகின்றேன். இசை விழாவின் முதல் நாள், இந்த இயக்கத்திற்கு எதிராயிருப்பவர்கள், இக் கூட்டத்தின் எண்ணிக்கையையும் உற்சாகத்தையும் பார்த்திருந்தார்களேயானால், அவர்களுக்கு இந்த இயக்கத்தின் உண்மையான தத்துவம் இன்னதென்று தெரிந்திருக்கும். இங்கே கூடிய கூட்டத்தைப் பணத்தினாலாவது, சாமர்த்தியத்தினாலாவது கூட்டமுடியாது. இவ்வளவு திரண்ட

கூட்டம் வருமென்று நான் நினைக்கவே இல்லை. தமிழ்மக்களுக்குத் தங்கள் தாய்மொழியின்பேரில் இருக்கும் அபிமானமும் உணர்ச்சியும்தான் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை இவ்விடம் கொண்டுவந்துசேர்த்தது. இந்தவிதமான ஒரு கலை உணர்ச்சி இயக்கத்தில் ஏதோ அரசியல் சூழ்ச்சி இருக்கின்றது என்று கூக்குரல் போட்டுக்கொண்டு இருக்கிறவர்களுக்கு என்னபதில் நான் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. முதல் நாள் இராஜா அவர்கள், தான்செய்த சொற்பொழிவில், "இந்த இயக்கத்தில் அரசியல் சூழ்ச்சி ஒன்றுமே இல்லை" என்று அழுத்தமாகவும், தெளிவாகவும் சொன்னார்கள். "இவருடைய பேச்சை எதிரிகள், காதில் கூட போட்டுக்கொள்ள மாட்டார்க"ளென்று நான் அன்றையதினமே சொன்னேன். அதற்குத் தகுந்தபடி என்ன நேர்ந்தது பாருங்கள். மறுநாள் காலை வந்த இந்து பத்திரிகையில் பிரசுரமான தலையங்கம் என்னவாயிருந்தது என்று நினைத்துப் பாருங்கள். இந்தத் தலையங்கத்தைப் படிக்காதவர்களும்கூட இதைப் படிக்கவேண்டுமென்று ஒரு ஹைகோர்ட்டு ஜட்ஜூம் பிரசாரம் செய்தார். "இராஜா அவர்கள் அரசியல் சூழ்ச்சி இல்லை என்று சொன்னாரே, அதற்கு என்ன அர்த்தம்?" என்று இந்து பத்திரிகை கேட்கின்றது. "இந்த இயக்கத்தில் அரசியல் சூழ்ச்சி இருக்கிறதென்று பறையடித்தார்களே அவர்கள் என்ன அர்த்தத்தில் பேசினார்கள்?" என்று நான் கேட்கிறேன். நாம் என்ன சொன்னபோதிலும் எதிரிகள் நம் சொற்களைக் காதில் போட்டுக்கொள்ளமாட்டார்களென்று எனக்குத்தெரியும். இந்த மேடையிலிருந்து நான் தமிழிசைச்சங்கத்தின்சார்பாகச் சொல்லுகின்றேன். நம்முடைய இயக்கத்தில் அரசியல் சூழ்ச்சி ஒன்றுமே கிடையாது. நம்முடைய மாநாட்டிற் கலந்துகொண்ட முக்கியமானவர்களைக்கவனித்தபோதிலும்சரி, அல்லதுஇசையரங்குகளில் பங்கெடுத்துக்கொண்ட பாடகர்களைக் கவனித்தபோதிலும் சரி, எங்கள் இயக்கத்தில் வகுப்புப்பேதமாவது அரசியல் சூழ்ச்சியாவது கொஞ்சங்கூட இருக்கமுடியாதென்பது யோக்கியமான ஒவ்வொருவருக்கும் தெரியவரும். நம்முடைய இயக்கத்திற்கு ஒருவகையான அபாயம் இருக்கின்றதென்று எனக்குத் தோன்றுகின்றது. நம்முடைய நாட்டை ஐ. சி. எஸ். உத்தியோகஸ்தர்கள் தான் ஆண்டு வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தஉத்தியோகஸ்தர்களைத்தெய்வீகப்பிறவிஎன்றுசொல்லுவது வழக்கம். இவர்கள் எந்தக்காரியத்திலும் நிபுணர்கள். இவர்களுடைய சாமர்த்தியமெல்லாம் நம்முடைய தலையில் விடியும் போல் தோன்றுகிறது!. இவர்களில் சிலர் சங்கீத நிபுணர்கள். இவர்களுடைய சாமர்த்தியம் சங்கீதக் கலையையும் விடவில்லை. ஆனால், எங்கள் துர்ப்பாக்கியத்தினால் இவர்களுடையஅபிப்பிராயம், தமிழிசையியக்கத்திற்கு நேர்விரோதமாக இருக்கிறது! இவர்

களுடையஎதிர்ப்புப்போதாதென்று சிலஹைக்கோர்ட்டு ஜட்ஜுகளும் நமக்கு விரோதமாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய எதிர்ப்பையும் விரோதத்தையும் இவர்கள் பலமாகக் காட்டிவருகின்றார்கள். என்னைப் பொறுத்த மட்டில் இதைப்பற்றிக் கவலையே யில்லை. ஆனால் நம் நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் இந்த எதிர்ப்பினால் பயந்துவிடுவார்களோ என்று தோன்றுகிறது. நம் நாட்டில் அடிமைத்தனமான மனப்பான்மையும் உத்தியோகஸ்தர்களைக் கண்டால் பயப்படுவதும் பூராவும் போகவில்லை. ஓர் ஊரில் கலெக்டர் தமிழ் இசைக்கு விரோதம்என்றால் சிலராவது இந்த இயக்கத்தில் சேர பயப்படுவார்கள். ஹைக்கோர்ட்டுஜட்ஜுகள்விரோதம் என்றால் பல கட்சிக்காரர்கள் பயப்படுவார்கள். நம்முடைய மக்களின் மனப்பான்மையை உத்தேசித்து உத்தியோகங்களில் இருக்கிறவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளவேண்டியது அவசியம். உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய கடமையை அறியாவிட்டாலும் தமிழ் மக்கள் இந்த பூச்சாண்டிகளுக்கெல்லாம் பயப்படக்கூடாதென்று நான் நிரம்பவும் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழ்மொழியில் கர்நாடக சங்கீதத்திற்குப்பொருத்தமான உயர்ந்த பாட்டுக்கள் போதுமான அளவு இல்லை" என்று நம்முடைய எதிரிகள் சொல்லிக்கொண்டே யிருக்கிறார்கள். சங்கீதத்தைப் பற்றிப் பேச உரிமையுடைய நிபுணர்களின் கருத்துக்களையாவது நம் எதிரிகள் கவனிக்கக் கூடாதா? அநேக ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப் பயிற்சியில் பழுத்த டாக்டர் சாமிநாதையர் சொன்ன கருத்துக்களை எதிரிகள் கவனிக்கட்டும். போனயாண்டு கர்நாடக சங்கீதத்திற்குக் கர்த்தா என்று எண்ணிக்கொண்டிருக்கும் மியூசிக் அகாடமியில் தலைமைவகித்த சுப்பராமபாகவதரின்பேச்சை நானே நேரில்கேட்டேன். "தமிழ்மொழியில் கர்நாடகசங்கீதத்திற்குஉகந்ததானபாட்டுக்கள் இல்லை என்பது சுத்தப்பொய் என்றும், ஏராளமான கீர்த்தனங்களும் மற்றப் பாட்டுக்களும் இருக்கின்றன" என்றும் சொன்னார். சங்கித நிபுணரான இவருடைய அபிப்பிராயத்தையுங்கூட எதிரிகள் காதில் போட்டுக்கொள்ளவில்லை. முத்தையா பாகவதரவர்கள் சமீபத்தில் அண்ணாமலைப்பல்கலைக்கழக ரிஜிஸ்டிராருக்கு எழுதியிருக்கும் ஒரு நிருபத்தில் தமிழ்ப் பாட்டுக்களின் சிறப்பினைப் பாராட்டி எழுதியிருக்கிறார். இவர்களுடைய ஆதரவுகளெல்லாம் போதாதென்றால் நாம் என்னதான் சொல்வது? இதனால்தான் நான் முதல்நாள்பேசியபோது, 'என்னைப்பொறுத்த மட்டில் இந்தவிஷயத்தில் நான் யாருக்கும் சமாதானம்சொல்லத் தயாராயில்லை; யாரிடத்திலும் மன்னிப்புக்கேட்கத் தயாராக

வில்லை; மட்டமோ, உயர்வோ என்பாஷையில் இருக்கும் சங்கீதம் எனக்குப்போதும்' என்று சொன்னேன். என்னுடைய தாய் மொழியின்மேல் எனக்கு இருக்கும் அபிமானத்திற்கு நான் யாருக்குச் சமாதானம் சொல்லவேண்டும்? அவசியமே இல்லை. தன்னுடைய 'தாய் மொழி குற்றம்' என்று எவன் சொல்லு கிறானோ, அவன்தான் காரணங்களும் சமாதானமும் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறான். என்னுடைய பேச்சுக்குப் பின் "சண்முகம் செட்டியார் தமிழில் மட்டமான சங்கீதம் போதும் என்கிறார்" என்று சிலர் பத்திரிகைகளில் எழுதினார்கள். மட்ட மான சங்கீதம் போதுமென்று நான் சொன்னேன்? என் தாய் பாஷையில்தான் சங்கீதத்தை நான் மனப்பூர்வமாக அனுபவிக் கிறேன்என்றால், தமிழ் சங்கீதம் மட்டம் என்று அதற்குஅர்த்தம்? தமிழ்ப்பாட்டுக்களைப்பற்றிஎதிரிகள்என்னவியாக்யானம்செய்த போதிலும், சிறந்த சங்கீதம் தமிழில் உண்டென்பது எனக்குத் தெரியும். அதில்தான் நான் இன்பத்தை அடைகின்றேன். அயோக்கியத்தனமாக வியாக்யானம் செய்யும் எதிரிகளுக்குச் சமாதானம் சொல்லி யாதொரு பிரயோஜனமுமில்லை; அவர் களுக்குச் சமாதானம் சொல்லவேண்டிய அவசியமுமில்லை; இனி மேல் சமாதானம் சொல்வதாக எனக்கு உத்தேசமு மில்லை. "தமிழ் இயக்கத்தை எதிர்ப்பவர்கள் யார்?" என்று கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள். ஏதோ காரணங்களினால் கர்நாடக சங் கீதத்தில் தெலுங்குப் பாட்டுக்கள்தான் அதிகமாயிருக்கின்றது. ஆகையினால் தமிழ் 'இசை இயக்கம் ஆந்திரர்களுக்கு விரோத இயக்கம்' என்று சில சூழ்ச்சிக்காரர்கள் பிரசாரம் செய்து வரு கிறார்கள். தமிழர்களுக்கும் ஆந்திரர்களுக்கும் 'குடுமிக் கலியா ணம்' செய்வதற்குச் சிலர் முயற்சி செய்கிறார்கள். 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் இராஜா சர். அண்ணாமலைச்செட்டியா ருக்கு பகிரங்கமாய் வெளியிட்டிருக்கும் கடிதத்தைப் படித்த போது எனக்கு நிரம்பவும் சந்தோஷம் உண்டாயிற்று. 'ஆனந்த விகடன்' நம்முடைய இயக்கத்திற்கு எதிராயிருந்தபோதிலும், இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில் உண்மை பேசியிருப்பது நிரம்பவும் பாராட்டத்தக்கது. "ஆந்திரர்கள் தமிழ் இசை இயக்கத்தை எதிர்க்கவுமில்லை; அதைப்பற்றி அவர்கள் கவலைப் படவுமில்லை" என்று அழுத்தமாக விகடன் சொன்னது பெரிய உண்மை. ஆந்திரர்கள் எங்கள் இயக்கத்திற்கு விரோதமல்ல என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்களுக்குத் தங்கள் பாஷையின்மேல் அபாரமான அபிமானம் உண்டு. தன் தாய் பாஷையின்மேல் ஒருவனுக்கு உண்மையான அபிமானமிருந்தால் இன்னொருவன் தன்னுடைய தாய் பாஷையின்மேல் அபிமானத் தைக் காட்டும்போது, அவன் மற்றவனைப் புகழ்வானே ஒழிய எதிர்க்கமாட்டான். தமிழ் இசை இயக்கத்தை எதிர்ப்பவர்கள்

யார்? தமிழ்நாட்டிலே தமிழராகப் பிறந்து, தமிழை இகழுகிற ஒரு சிறிய கூட்டம்தான். இவர்களைத் 'தாய்மொழியை வெறுப்பவர்கள் என்று சொல்வதில் எனக்கு நாக்குக்கூசாது. தமிழிசை இயக்கத்தை எதிர்க்குந் தமிழன், தாய்மொழியை வெறுப்பவன் என்பதில் சந்தேகமே இல்லை. தமிழ்மகனாகப் பிறந்த ஒரு சங்கீத வித்துவான்'தமிழ்மட்டம்;தமிழில்பாடமாட்டேன்' என்றுசொன்னால்,அவன் தமிழ்த்துரோகி என்று கூசாமல்சொல்லுவேன். மியூசிக் அகாடமி மெம்பர்கள் நம்மை ஒருபுறம்தாக்க, அந்த அகாடமியைச் சேர்ந்த சில வித்துவான்கள் தாங்களும் இந்தச்சண்டையில் கலந்துகொள்ளவேண்டுமென்று முன் வந்திருக்கிறார்கள். மியூசிக் அகாடமியின்சார்பாக இந்தவருடம் நடந்த வித்துவான்களுடைய கூட்டத்தில், தமிழிசை இயக்கத்தைப்பற்றிப்பலமான பேச்சுகள் நடந்தன. "திருச்சிவானொலி நிலையத்தில்100-க்கு 80பாட்டுக்கள் தமிழ்ப் பாட்டுக்களாக இருக்கவேண்டு"மென்று நாம்செய்த தீர்மானத்தை இந்த வித்துவான்கள் கண்டனம் செய்திருக்கிறார்கள். நம்முடைய தீர்மானம் அமுலுக்குவந்தால், கர்நாடக சங்கீதம் கெட்டுப்போய்விடுமென்பது இந்தப் பெரிய வித்துவான்களுடைய அபிப்பிராயம், வித்துவான்களுடைய இந்த அபிப்பிராயத்தைப் பார்த்தபோது எனக்குச் சிரிப்புவந்தது. என்னென்ன விசித்திரமான காரணங்களைக்கொண்டு நம்இயக்கத்தை எதிரிகள் தாக்குகிறார்கள் என்பதை யோசிக்கும்போது மிகவும் வேடிக்கையாய்த் தானிருக்கின்றது. சில மாதங்களுக்குமுன் நடந்த ஒரு கூட்டத்தில் ஒரு கர்நாடக சங்கீத நிபுணர், நம்முடைய இயக்கத்தை எதிர்த்துப் பேசும்போது, "கர்நாடக சங்கீதத்தை ஒரு சிறு பான்மையோர் ஒரு சிறிய அறையிலிருந்து கேட்கவேண்டு மென்றும், அதை அனுபவிப்பதற்குப் பிரத்யேகமான பழக்கம் வேண்டுமென்றும்" சொன்னார். இந்த நிபுணர் சொன்னது உண்மையா? அல்லது இப்பொழுது மியூசிக்அகாடமியைச் சேர்ந்த வித்துவான்கள் சொன்னது உண்மையா? என்பது தெரியவில்லை. இந்த இரண்டு அபிப்பிராயங்களும் முரண்பட்டனவா யிருக்கின்றன. வானொலியில் சங்கீதம் கேட்பவர்கள் பெரும்பான்மையும் பாமர மக்கள். அவர்களுக்குச்சங்கீதத்தில்பயிற்சியில்லை. அவர்களுடைய செவிகள் கர்னாடகசங்கீதத்திற்காகப் பழக்கப்படவுமில்லை. இந்தப் பாமர மக்களும்கூட உயர்தர கர்னாடக சங்கீதமென்று சொல்லப்பட்ட சங்கீதத்தைத்தான் கேட்க வேண்டுமா? நியாயமில்லாத இவர்களுடைய கருத்தை வானொலி நிலையத்தார் அங்கீகாரம் செய்யமாட்டார்களென்று நம்புகின்றேன். இந்த வித்வான்களில் ஒருவர் மிகவும் சாமர்த்தியமான பொய்யையும்கூட பேசியிருக்கிறார். அஃதாவது 'தமிழிசை இயக்கம் ஆரம்பித்த சமயத்தில் முதல் பாட்டும், கடைசி பாட்டும் தமிழிலிருந்தால் போதுமென்று சொன்னோமென்றும், வரவர பெரும்பான்மையும் தமிழ்ப்பாட்டுக்

களாக இருக்க வேண்டுமென்று இப்பொழுது கேட்கின்றே'மென்றும் அவர் சொன்னர். இந்த அபாண்டமான பொய்க்கு என்ன பதிலைத்தான் சொல்லுவது? கச்சேரிகளில் முதல் பாட்டும் கடைசி பாட்டும் தமிழில் இருந்தால் போதுமென்று சொல்வதற்காகவா, நாம் இந்த இயக்கத்தை ஆரம்பித்தோம்? பெரிய சங்கீத வித்துவான்கள் கூசாமல் இவ்வளவு பொய் சொல்லுவது அழகாக இல்லை.

தமிழிசை இயக்கத்திற்கு இவ்வளவு பெரிய எதிர்ப்பு உண்டானது ஆச்சரியமில்லை. உலகத்தில் எந்த நாட்டுச் சரித்திரத்தை எடுத்துக்கொண்டாலும், வேதங்கள், சாத்திரங்கள், கலைகள், இம்மூன்றையும் ஒரு சிறுபான்மையோரே அனுபவித்துக் கொண்டு வந்தார்கள். பெரும்பான்மையான மக்கள் இவைகளை அனுபவிக்கக் கூடாதென்று சாத்திர சம்பந்தமாக நிபந்தனைகளையும் ஏற்படுத்தியிருந்தார்கள். "சூத்திரன் வேதத்தைப் படித்தால் அவன் நாக்கை அறுக்க வேண்டுமென்றும், வேதத்தைக் கேட்டால் அவன்காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்றும்" சொன்ன காலமும் உண்டு. மேல்நாட்டிலுங்கூட அவர்களுடைய வேதத்தைப் பாமரமக்கள் படிக்கக்கூடாதென்ற விதி ஒரு காலத்திலிருந்தது. அவர்களுடைய வேதமாகிய பைபிளை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க ஆரம்பித்தபோது, பூசாரிகளின் எதிர்ப்பு மிகவும் பலமாயிருந்தது. வேதத்தைத் தாய்மொழியில் எழுதக்கூடாதென்று கூச்சலிட்டார்கள். இதையொட்டின சண்டைதான் இப்பொழுது நடக்கும் சங்கீதச் சண்டை. இதுவரையில் கர்நாடக சங்கீதத்தை ஒரு சிறிய கூட்டத்தார் தங்களுடைய சொத்தாகக் கருதி, மிராசு பாத்தியதை கொண்டாடி அனுபவித்துக்கொண்டு வந்தார்கள். ஒரு சிறு கூட்டத்தார் ஒரு சிறிய அறையில் சேர்ந்து எந்தவிதமான சங்கீதத்தை அனுபவித்தாலும் நமக்குக் கவலையில்லை. ஆனல் இக்காலத்தில் பெரிய கட்டிடங்களில் ஒலிபரப்பிகளை வைத்து ஆயிரக்கணக்கான மக்கள் சங்கீதத்தைக் கேட்கும் வழக்கம் வந்துவிட்டது. இந்த ஆயிரக்கணக்கானமக்கள் சங்கீதத்தைக்கேட்பதற்குப் பணத்தையும் கொடுக்கிருர்கள். இப்படியிருக்க, இந்தப் பெரிய கூட்டத்தில் முதல் வரிசையிலிருக்கும் 10, 20 இரசிகர்கள் தலையை ஆட்டி அனுபவிக்கக்கூடிய சங்கீதத்தைமட்டும் பாடினல், பாமரமக்கள் எத்தனை காலம் பொறுத்துக்கொண்டிருப்பார்கள்? அநேக ஆண்டுகளாக இந்தக் கொடுமையைப் பொறுத்துக்கொண்டும் இருந்தார்கள். கச்சேரி முடிவடையும் சமயத்தில், "வானத்தின்மீது மயிலாடக் கண்டேன்" "ஆசை முகம் மறந்து போச்சே" என்ற இம்மாதிரிப் பாடல்களைப் பாடவேண்டுமென்று பாமர மக்கள் கூச்சலிடுவார்கள். இவைகளைக் கேட்டு ஆனந்தத்தையும் அடைந்தார்கள். எவ்வளவு காலத்திற்கு இம்மாதிரி நடக்க முடியும்?

பணத்தையும் கொடுத்துவிட்டு நாம் அனுபவிக்கக்கூடிய பாட்டையும் கேட்க நமக்கு உரிமை இல்லையா? என்று மக்களின் மனத்தில் உணர்ச்சி தோன்றி விட்டது. இந்த உணர்ச்சிதான் தமிழிசை இயக்கத்தை வெளிப்பரப்பிவிட்டது. மக்கள் விழித்துக்கொண்டார்கள். இனி அவர்களைச்சங்கீத வித்துவான்களோ, மியூசிக் அகாடமி மெம்பர்களோ யாரும் ஏமாற்ற முடியாது.

'ஆனந்த விகடன்' பத்திரிகையில் ஒரு இரசமான சித்திரம் இருக்கிறது. அந்தச் சித்திரத்தை நான் நிரம்பவும் கவனித்து அனுபவித்தேன். "வானத்தில் சங்கீதம் என்னும் பெயர்கொண்ட ஒரு வானம்பாடி, பறந்துகொண்டிருக்கிறது. இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் "பாஷைக் கட்டுப்பாடு" என்ற ஒரு கூண்டை வைத்துக்கொண்டு, அந்த வானம்பாடியைப் பிடிக்க முயற்சிக்கின்றார். ஆனால் வானம்பாடியோ அவருடைய சூட்சிக்கு அகப்படவில்லை." இந்தச்சித்திரத்தைப் பார்த்தபோது எனக்கு வேறே ஓர் அர்த்தம் புரிந்தது: வானம்பாடி தன்னிச்சையாக வானத்தில் பறந்து கொண்டிருக்கும் ஒரு பறவை. இந்த வானம்பாடிகளுக்கு ஒரு விசேஷமுண்டு. தமிழ்நாட்டிலுள்ள வானம்பாடிகள் தமிழில்தான் பாடும். இங்கிலாந்திலுள்ள வானம்பாடிகள் இங்கிலீஷில்தான் பாடும். இப்படியேதான் ஒவ்வொரு நாட்டிலும். தமிழ் நாட்டில் சில வருஷங்களுக்கு முன்பு ஒரு சம்பவம் நேர்ந்துவிட்டது. ஒரு சிறு கூட்டத்தார் ஒரு நாள் தமிழ் வானம்பாடியைப் பிடித்து, "கர்நாடக சங்கீதம்" என்னும் கூண்டிலடைத்து விட்டார்கள். அதுமட்டுமா? வானம்பாடியை அடித்து, அதைத் தொந்தரவு செய்து, அதனுடைய இயற்கைக்கு விரோதமாக தெலுங்கில் பாடவேண்டும், கன்னடத்தில் பாடவேண்டும், சமஸ்கிருதத்தில் பாடவேண்டும், இந்துஸ்தானியில் பாடவேண்டும் என்று இந்த வானம்பாடியை உபத்திரவித்துக் கொண்டிருந்தார்கள். என்ன செய்யும், பாவம் அந்தப் பறவை? இவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டு இவர்கள் சொல்லுகிற படியெல்லாம் பாடிக்கொண்டிருந்தது. அந்தக் கூண்டானது கொஞ்ச காலமாக மைலாப்பூரிலே மியூசிக் அகாடமியார் வசமிருந்தது. இராஜா சர். அண்ணாமலைச்செட்டியார், மியூசிக் அகாடமிக்குப் பல சமயங்களில் போய், வானம்பாடி படும் அவஸ்தையைப் பார்த்தார். ஒரு நாள் மெதுவாகக் கூண்டைத் தூக்கிக் கொண்டு வந்து விட்டார். தமிழ் மக்கள் எல்லோருக்கும் முன்னிலையில் கூண்டைத் திறந்து, சிறைப்பட்ட வானம்பாடியை விடுதலைசெய்தார். அந்தத் தமிழ்வானம்பாடிதான் ஆனந்த விகடன் சித்திரத்தில் சந்தோஷமாகப் பறக்கும் வானம்பாடி. இனி மேல் இந்தப்பறவை எந்த சூழ்ச்சிக்கும் அகப்படாது. தமிழ்நாட்டிலே தன் இச்சைப்படி பறந்து தமிழில் பாடி தமிழர்களுக்கு இசையின்பத்தை ஊட்டும்.

# பொங்கல் வாழ்த்து

பொங்குக பொங்கல்! பொங்கிப் பொலிக!
இஞ்சியும் மஞ்சளும் இனியநற் கரும்பும்
தெங்கிளங் காயும் தீங்கனி பலவும்
ஆன்பால் சருக்கரை அளாவிய அடிசிலும்
வைத்துப் படைத்து வளம்பெற உண்டபின்,
ஆடவர் பெண்டிர் அனைவருங் கூடி
"பசிபிணி நீங்கிப் பாருளோர் வாழ்க!
அன்பே அறனே ஆண்மை சிறக்க!
வாழ்ந்தனர் தமிழர்! வளர்ந்தது தமிழ்மொழி!"
என்றே முழக்கி இசைக்க தமிழ்ப்பண்;
தமிழர் விழாவாம் தமிழ்த்திரு நாளில்,
குமரி வேங்கடம் கொழுதமிழ் நாட்டில்
உள்ளோர் அனைவரும் உள்ளன் புடனே
உயர்த்துக தமிழ்க்கொடி உலகெலாம்
முத்தமிழ் பரவி முழக்கம் செயவே!

வித்துவான். அன்பு கணபதி.

அந்தமிலான் செய்யும் அருள்நெறியால் வீறுற்றே
நந்தமிழர் யாணர் நலங்காட்டும் — இந்தநாள்
செந்தமிழைப் போற்றி செறிகநீர் பன்னலமும்
எந்தம் விருப்புரையாம் ஈது.

திருநிறை கல்வியும் தேர்ந்தநல் இன்பும்
வருமுறை ஆயுளும் வாய்ந்தே — அருளால்
இருநிலத்தே நன்றுற்றி ஈண்டும் புகழ்சேர்
ஒருவீராய் வாழ்வீர் உயர்ந்து.

வாழி தமிழ்நெறியே வாழியவே அன்பரெலாம்
வாழி தமிழே வளர்ந்து.

"குறள், குடில்" திண்டுக்கல். P. R. மீனாட்சிசுந்தரம் M. A. M. வனசாட்சி.

# சென்னைமாகாணத் தமிழர் பத்தாவது மாநாடு

*29—12—1943* மாலை **3**-மணிக்குச் சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் சென்னைமாகாணத் தமிழர் பத்தாவது மாநாடு மதுரையில் செந்தமிழ்ப் புரவலர் இராவ்பகதூர் **கோ. ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள்** தலைமையில் நடைபெற்றது. **மகாமகோபாத்யாய முதுபெரும் புலவர் மு, கதிரேசச் செட்டியாரவர்கள்** மாநாட்டைத் தொடங்கி வைத்தார்கள். வரவேற்புக்கழகத்தலைவர் திருவாளர். **இ. மா. கோபாலகிருட்டினக் கோனாரவர்கள்** யாவரையும் வரவேற்றுப் பேசினார்கள். சங்க அமைச்சர் திருவாளர். இ. மு. சுப்பிரமணிய **பிள்ளை**யவர்கள் பத்தாண்டுகளாகச் சங்கம் செய்துவரும் பணிகளைப் பற்றிய அறிக்கையைப் படித்தார்கள். சில தீர்மானங்கள் நிறைவேறின. பின் தலைவரவர்கள் முடிவுரையுடனும் நன்றி கூறலுடனும் மாநாடு நிறைவு பெற்றது. நிறைவேறிய தீர்மானங்கள் பின் வருவன :—

1. திருவாளர்கள். சித்தாந்தப் பேராசிரியர் மா. வெ. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B. A,, கோவிற்பட்டி வழக்கறிஞர் சு. கோமதிநாத பிள்ளையவர்கள் B. A., க. ப. சந்தோஷமவர்கள் B. A., L. T., ஆகிய தமிழ்ப் பெரியார்கள் காலமானமை பற்றி வருந்துவதென்பதும், அவர்கள் குடும்பத்துக்கு இதனை அறிவிப்பதென்பதும் தீர்மானிக்கலாயின.

2. (அ) சங்கம் பல ஆண்டுகள் முயன்று சென்னைப் பல்கலைக்கழகம், திருவாங்கூர் பல்கலைக் கழகம், தென்னிந்திய ஆசிரியர் சங்கம், சென்னை மாகாணப் பூகோளச்சங்கம், இலங்கை அரசாங்கக் கல்வித்துறை இவைகளின் துணைக்கொண்டு வெளியிட்டிருக்கும் **"கலைச்சொற்கள்"** என்ற நூலை வாங்கித் தமிழ் நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கெல்லாம் அனுப்பி அச்சொற்களைப் பள்ளிக்கூடப் போதனைக்குத் தாராளமாகப் பயன்படுத்த வேண்டுமென்று தான் இட்ட ஆணைக்கு மாறாக இப்போது வேறு நோக்கத்துடன் ஒருகலைச் சொற்கழகம் அமைத்துத் தமிழ் மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வேலை தொடங்கச் செய்திருக்கும் சென்னை அரசாங்கத்தினரை இப்புது முயற்சியை விட்டு விட்டு முன் ஆணையின்படி நடந்துகொள்ளும்படிக்கும் கலைச்சொற்களை விரிவாக்கும்படி சங்கத்துக்கு வேண்டும் துணை புரியும்படிக்கும் இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

(ஆ) இதுபற்றிச் சென்னைக்கவர்னரவர்களையும், ஆலோசகரையும் பார்த்து வேண்டுவன செய்ய திருவாளர்கள் சர். குமாரராசா முத்தையச் செட்டியாரவர்கள், சர். R.K. சண்முகம் செட்டியாரவர்கள், சர். P.T. இராசனவர்கள், S. முத்தையமுதலியாரவர்கள், இராவ்பகதூர். C. M. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் இவர்களைத் தூதுக்கழகமாக இம்மாநாடு அமைக்கிறது.

3. ஊர்ப் பெயர்கள் முதலியன பிறமொழிகளில் இருப்பதை மாற்றிப் பழைய தமிழ்ப் பெயர்களுடன் வழங்கும்படி செய்ய அரசாங்கத்தினரையும் பிற உரிமையாளரையும் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. சென்னையில் தமிழிசைச் சங்கத்தின் சார்பாக நடைபெறும் தமிழிசை மாநாட்டையும், தமிழிசைச் சங்கத்தையும் தோற்றிவித்த உயர்திருவாளர் பல்கலை வள்ளல் அரசர் சர் அண்ணாமலைச் செட்டியாரவர்கள் நீடூழி வாழ இம்மாநாடு வாழ்த்துகின்றது.

தீர்மானங்களைப் பற்றிப் பேசியவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவர் இராவுசாகிபு, திருவாளர். ஐ. குமாரசாமி பிள்ளையவர்களும். நாகர்கோவில் தொண்டர் குழாம் தலைவர் திருவாளர். ஆறுமுகம் பிள்ளையவர்களுமாவர்.

## சைவசித்தாந்த மகாசமாஜத்தின் 38-வது ஆண்டுவிழா.

இவ்விழா மதுரை மீனாட்சிசுந்தரர் ஆலயத் திருக்கலியாண மண்டபத்தில் 1943 திசம்பர் 27, 28, 29-ஆம் நாட்களில் மிகச் சிறப்புற நிகழ்ந்தேறியது.

இவ்விழாவையொட்டி, சைவர் மாநாடு தமிழ்ப்பெரியார். திரு. வி. கலியாணசுந்தர முதலியார் தலைமையிலும், சைவ இளைஞர் மாநாடு திரு. பு. ர. சாமிநாதன் M. A., அவர்கள் தலைமையிலும், சைவ மங்கையர் மாநாடு திருவாட்டி. ஈ. த. இராசேசுவரியம்மையார் அவர்கள் தலைமையிலும் நிகழ்ந்தேறின. மாநாட்டு நிகழ்ச்சிகளில் தமிழ்நாட்டுப் பெரியோர்கள் பலருங் கலந்துகொண்டனர். சைவ அன்பர்கள் பெருந் திரளாகக் குழுமியிருந்து மாநாட்டு நிகழ்ச்சிகளை ஆதரித்தனர்.

# மாணவர் நன்னெறிக்கழகம்.

திரு. கணேசர் செந்தமிழ்க் கலாசாலை,
மேலைச்சிவபுரி.

### ஒன்பதாம் ஆண்டு நிறைவு விழா.

இக்கழகத்தின் ஒன்பதாம் ஆண்டு நிறைவுவிழா **பேராசிரியர் கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்** சீரிய **தலைமையில்** 13—12—43-ஆம் நாள் மாலை 4-30 மணிக்குத் தொடங்கியது. வரவேற்புரையைத் திரு. ஆ. வ. இராமநாதச் செட்டியாரவர்கள் நிகழ்த்தினார்கள். வரவேற்பு அளித்தலும், அறிக்கை படித்தலும் நிகழ்ந்தபின், பல அறிஞர்களிடமிருந்தும் வந்த வாழ்த்துச் செய்திகள் படிக்கப் பட்டன. தலைவர் தம் முகவுரையை எல்லோரும் மகிழுமாறு தெளிவும் இனிமையும் பொருந்த நிகழ்த்தினார்கள். தலைவர் முன்னுரைக்குப் பின் **பழ. கண்ணம்மை 'வீரத்தாய்மார்'** என்னும் பொருள் பற்றியும், **பேராசிரியர் வித்துவான் சி. இலக்குவனார் B. O. L. அவர்கள்** 'பண்டைத் தமிழ்ப் புலவர்' என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். **கழக அமைச்சர் திருவாளர். தி. பொ. நாராயணசாமிபாரதி அவர்கள்** நன்றிகூறக் கூட்டம் 8-30 மணிக்கு இனிது நிறைவேறியது.

இரவு 11-மணிக்குமேல் மாணவர்களால் தமிழிசையரங்கும் "**சுடர்த்தொடீஇ**" எனத்தொடங்கும் கலித்தொகை பாட்டிற் கேற்ற "**இன்பவல்லி**" எனும் நாடகமும் சிறப்பாக நடத்தப் பெற்றன. திரளான மக்கள் இயல், இசை, நாடகத்திற்கு வந்திருந்து கண்டும் கேட்டும் களிப்பெய்தினர்.

### சொற்பொழிவு.

கரந்தைத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில் 2-1-44 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு **இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் அருட்டிரு விபுலாநந்த அடிகளார்** "செழுங்கலை நியமம்" எனும் பொருள் பற்றி ஓர் அரிய விரிவுரை யாற்றினார்கள். **சங்க அமைச்சர்** அடிகளின் சொற்பொழிவைச் சுருக்கியுரைத்து அடிகட்கு நன்றிகூறினார்கள். இச் சொற்பொழிவின் சுருக்கம் பின்னர் நம் பொழிலில் வெளியிடப் பெறும்.

# நன்கொடைகள்.

## அக்டோபர், நவம்பர், 1943.

---

### புலவர் கல்லூரி

| | |
|---|---|
| திரு. | |
| S. சாமிநாத முதலியார் அவர்கள் ஒரு ரூபா நன்கொடை வசூல் வரவு | 25—0—0 |
| V. கணபதி அவர்கள், தஞ்சை | 50—0—0 |
| மருதமுத்துத் தஞ்சைராயர் அவர்கள், தஞ்சை | 0—8—0 |
| ஜினகுமார முதலியார் அவர்கள், கரந்தை | 0—8—0 |
| தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம் நன்கொடை 3-ம் பகுதி | 25—0—0 |
| மேஜர் R. மாதவாச் சாரியார் அவர்கள், (Ry. Engineer) தஞ்சை | 2—0—0 |
| ச. அய்யாவுக் காடவராயர் அவர்கள் திருமணக்கொடை | 1—0—0 |
| பழநிவேல் புண்ணுக்கர் அவர்கள், திருமணக்கொடை | 1—0—0 |
| ஜினகுமாரமுதலியார் அவர்கள், கரந்தை | 0—8—0 |
| R. V. இலக்குமையா நாயுடு, அவர்கள் கோவை | 500—0—0 |
| தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்கள், கிழக்குமருதூர் | 25—0—0 |
| கூட்டுறவுப் பதிப்பகத்தார், கரந்தை | 25—0—0 |

### சங்கம்

| | |
|---|---|
| திரு. | |
| N. வேணுகோபால் நாயுடு அவர்கள் தமிழவேள் நன்கொடை | 1—0—0 |
| R. கோவிந்தராசபிள்ளை அவர்கள், கரந்தை ஆண்மகவு பிறந்தமை குறித்து | 1—0—0 |
| P. R. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் M.A., திண்டுக்கல் தமது திருமண நன்கொடை | 5—0—0 |

### ஏழை மாணவர் நிதி

| | |
|---|---|
| பண்ணுருட்டி மாஸ் கம்பெனியார் வரவு திரு. திருவேங்கடம் அவர்கள் வழியாக | 10—0—0 |
| வ. மருதப்பாபிள்ளை அவர்கள் கரந்தை, தீபாவளிக்காக | 10—0—0 |
| மெ. கந்தசாமி முதலியாரவர்கள், நடுப்பட்டி | 1—0—0 |

### இராதாகிருட்டினத் தொடக்கப் பள்ளி

| | |
|---|---|
| அரசியலார் கொடை | 459—11—0 |

### மருத்துவசாலை

| | |
|---|---|
| உண்டியல் வரவு | 0—12—0 |

### திக்கற்ற மாணவர் இல்லம்

| | |
|---|---|
| அரசியலார் கொடை | 1100—0—0 |